# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2025 சுறவம் (சன-94) விலை உருபா 1-50 (இதழ் எண்: 168)


# ‘திராவிடர்’ என்றதால் தமிழர் என்பதை மறந்தோம்!

*(இதழ் எண்: 167-இன் தொடர்ச்சி: 2)*

அவ்வாறிருக்க மொழி நிலையில், தங்களைத் தமிழர் என்று கூறிக் கொள்ள விரும்பாத தமிழர், இன நிலையில் மட்டும் ஏன் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொள்ள வேண்டும். இதைத் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

ஏதோ ஒரு பேச்சு நிலையில் அல்லது எழுத்து நிலையில் மட்டுமே தமிழ் பேசுபவர் தமிழர்கள் என்று பேசியும் எழுதியும வருகின்றனரே தவிர— குடி மதிப்புக் கணக்கிலும் அவர்கள் தமிழ் பேசுபவர்கள் என்று மட்டுமே குறிப்பிடப் பெறுகிறார்களே தவிர,—பிறப்புச் சான்றுகளிலும், கல்விச் சான்றுகளிலும், எல்லைக் கடவுகளிலும், பிற அரசுப் பதிவுகளிலும் தமிழர் என்று குறிப்பிடப் பெறுவதில்லையே, ஏன். அதே போல், இவர்கள் வீறாப்பாகக் கூறிக்கொள்ளும் *‘திராவிடர்’* என்றும் குறிப்பிடப் பெறுவதில்லையே, அதுவும் ஏன்? இந் நிலைதான் நாம் சிந்திக்கத் தக்கது.

இனி, தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொள்ளவோ குறிப்பிட்டுக்கொள்ளவோ விரும்பாத தமிழரல்லாத பிற தெலுங்கர், கன்னடர், மலையாளியர், துளுவர் முதலியோர் எல்லாம் தங்களை மேற் கூறிய . இடங்களிலும் அவ்வாறே மொழியினப் பெயராலேயே அழைத்துக் கொள்ளவும் குறித்துக் கொள்ளவும் இயல்கின்றதே, அஃது எப்படி? இந் நிலையையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆக தமிழர் என்பது வெறும் வாய்ப் பேச்சிலும் எழுத்திலும் மட்டுமே உள்ளது. அரசுப் பதிவில் எதிலும் தமிழர் என்றோர் இனமே இல்லை. ஆனால் தெலுங்கு இனத்தவரும், கன்னட இனத்தவரும், மலையாள இனத்தவரும் பிற இனத்தவரும் இங்கு உள்ளனர். ஆனால் தமிழினத்தவர் மட்டும் இந்தியாவில் எங்குமே இருப்பதாகப் பதிவில் இல்லை என்பது உண்மையாகிறது. இஃது ஏன்? அதுதான் இவர்கள் தங்களைத் தமிழர் என்று கூறிக் கொள்ளாமல் *திராவிடர்* என்று கூறிக் கொண்டதன்-இயக்கங்களுக்குப் பெயர்கள் சூட்டிக் கொண்டதன்—விளைவு என்க! **அஃதாவது, நாம் திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொண்டோம். அதனால் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதன் பெருமையை இழந்து போனோம்! இப்பொழுது சொல்லுங்கள் நாம் திராவிடர்களா? தமிழர்களா?**

இனி, ‘தமிழம்’ என்பதையே ஆரியர் ‘திரமிளம்’ என்று திரித்துக் கூறினர். ‘திரமிளமே’ பின்னர் ‘திரவிடம்’ ஆனது. எனவே தமிழமே ஆரியரால் ‘திரவிடம்’ எனப் பெற்றது என்க. இதையும் கால்டுவெல் தமிழினின்று பிரிந்த கிளைமொழிகளைச் சுட்டவே பயன்படுத்தினார். மக்கள் பிரிவினங்களைச் சுட்டுவதற்கு அன்று. சமற்கிருதத்தில் ‘ப’ ‘ப்ர’ என்றும், ‘ம’ ‘ம்ரு’— >‘மிரு’ என்றும், ‘த’ ‘த்ரு’ — >‘திரு’ என்றும் ‘க’ ‘க்ரு’– >கிரு என்றும் திரியும்.

**எடுத்துக் காட்டுகள்,**

(1) ப—ப்ர.

—பவழம்—ப்ரவாளம்—பிரவாளம்.

மணி + பவழம்—மணிப்பிரவாளம்.
—பா—ப்ரதி—பிரதி.
(2) ம—ம்ரு.
—மதங்கம்—ம்ருதங்கம்—மிருதங்கம்.
—மெது—ம்ருது—மிருது.
(3) த—த்ர.
—த்மிழம்—த்ரமிளம்—திரவிடம்,
திரை—த்ரோத்—திரோதம்,
(4) க—க்ரு,
—கண்ணன்—க்ருஷ்ணன்—கிருஷ்ணன்,

எனவே, 'திரவிடம்' என்பது தமிழினின்று பெறப்பெற்ற திரிபுச்சொல் என்றாலும், அது தமிழ்மொழியைக் குறிக்காது. தமிழினின்று பிரிந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய திரவிட மொழிகளை மட்டுமே குறிக்கும். அவ்வகையில் அம் மொழி பேசுபவர்களையும் குறிக்கலாம். ஆனால் அம்மொழியினத்தவர் தங்களை அவ்வாறு கூறிக் கொள்ளுவது இல்லை. திராவிடத் தெலுங்கர் என்றோ, திராவிடக் கன்னடர் என்றோ, திராவிட மலையாளி என்றோ திராவிடத் துளுவர் என்றோ அவர்கள் கூறுவதை யாரும் கேட்டிருத்தல் இயலாது.

அவ்வாறிருக்க தமிழர் மட்டும் ஏன் தங்களைத் திராவிடர் என்று பெருமை (!) யாகக் கூறிக் கொள்ளுதல் வேண்டும். எனவே இது சிறுமையும் அறியாமையுமே ஆகும். இதனால் ஏற்பட்ட விளைவும் பயனும் இன்னும் கேடானவையாகும். அவை என்னெனில், தெலுங்கும் கன்னடமும் துளுவும் தமிழன் திசை மொழிகள் என்பது போய், தமிழுடன் சேர்ந்து அவ்வனைத்து மொழிகளும், 'திராவிடம்' என்றும், ஏதோ ஒரு முன் திராவிட மொழியினின்று தோன்றியவை என்றும், எனவே அவ்வனைத்து மொழிகளும் உடன்பிறப்பு மொழிகளே (Sisters' Language) ஆகும் என்றும்—கருத்து வளர இடந்தந்தமையே ஆகும். ஆனால் உண்மையில், தமிழே மூல மொழி என்பதும், அதனின்று திசைந்து, ஒலிச் சிதைவுற்றுக் கிளைத்த மொழிகளே தெலுங்கு முதலிய திராவிட மொழிகள் என்பதுமே வரலாறு. இவ்வரலாற்றை மழுங்க அடிப்பதே தமிழர் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொள்வதன் விளைவு. இனி, அதனினும் வேடிக்கையும் பிறழ்ச்சியும் நகைப்பும் உண்டாக்குவது, ஒரு சார் தமிழர் தங்களைத் திராவிடத் தமிழர் என்று கூறிக் கொள்வதாகும் என்க.

ஆக மொத்தத்தில் தமிழர் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொண்டதால், தமிழர் என்னும் மொழியடிப் படையிலான இனப்பெயர் நிலை பெறாமல் போனது. மற்ற திராவிட மொழிக்காரர்களான தெலுங்கர், கன்னடர், மலையாளர், துளுவர் முதலியவர்க்கெல்லாரும் தங்கள் மொழிதழுவிய தேசியம் குறித்த மொழியினப் பெயர் நிலைத்திருக்க, தமிழர்க்கு மட்டும் மொழி குறித்த தேசிய இனப் பெயர் தோன்றாமலே போய் விட்டது. இந்த இழப்பே இன்று தமிழினத்தை ஒன்றுபடுத்துவதற்குப் பெருந்தடையாக உள்ளது என்பதைத் தமிழர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இனி, தமிழர் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொள்ளாமல் தமிழர் என்று கூறிக் கொண்டால், தமிழ்பேசும் ஆரியப் பார்ப்பனரும் அப்பெயர்க்குள் அடங்கி விடுவார்களே, அக்கால் அவர்களும் தங்களைத் தமிழர் என்று கூறத் தொடங்கி விடுவார்களே, எனவே இச் சிக்கலைத் தவிர்ப்பதற்கே தமிழர் தங்களைத் திராவிடர் என்று கூறவேண்டியுள்ளது என்றவாறு நம்மில் சிலர் அமைவு கூறுகின்றனர். இது முற்றிலும் தவறான தருக்கமாகும்.

ஆரியப் பார்ப்பனர், அஃதாவது தமிழ் பேசும் பிராமணர் தங்களைத் தமிழர் என்ற கூறிக் கொள்வது உண்மையானது அன்று. அவர்கள் தமிழ் நாட்டில் தங்களுக்குள்ள வாழ்வுரிமையை நிலைப் படுத்துவதற்காகவே அவ்வாறு தமிழர் என்றும் கூறிக் கொள்கின்றனா. இவ்வாறு இங்குள்ள அனைத்துப் பார்ப்பனரும் கூறிக் கொள்ள விரும்புவதில்லை. அவர்கள், தமிழ்நாட்டில் இருந்தாலும் சரி, வேறு ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களில் இருந்தாலும் சரி, அவர்கள் தங்களைப் பிராமணர்கள் என்றே கூறிக் கொள்ள முதற்கண் விரும்புகின்றனர். அதன் பின்னரே அவர்கள் தங்களைத் தெலுங்குப் பிராமணர், கன்னடப் பிராமணர், மலையாளப் பிராமணர், வங்காள பிராமணர், துளு பிராமணர் என்று கூறிக் கொள்ளுகின்றனர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ளவர்களும் தங்களைத் தமிழ்ப் பிராமணர் என்று கூறிக் கொள்ள விரும்பலாம். இவ்விருப்பமும் கூட அவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் வாழ்வுரிமை பெறும் நோக்கத்திற்காகவே இருக்கும். மற்றபடி அவர்கள் தமிழர்கள் என்று கூறிப் பெருமைப் படுவதில்லை. தமிழர் எல்லாரும் அவர்களுக்குச் சூத்திரர்கள் தாம். மேலும் சொன்னால், அவர்களுள் சிலர் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொண்டாலும், அவர்கள் தமிழ்மொழியைத் தங்கள் தாய்மொழி என்று கூறுவதில்லை; அவ்வாறு கூறுவதில பெருமைப் படுவதும் இல்லை. அவர்கள் எப்போதும் எங்கும் சமசுக்கிருத மொழியையே தங்கள் தாய்மொழி என்பதாகக் கருதியும் கூறியும் வருவதைக் கண்கூடாகப் பார்க்கவும் கேட்கவும் செய்கிறோம் என்பதை மறந்து விட வேண்டாம்.

இனி, பிராமணர்கள் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள் என்பதற்காக, நாம் நம்மைத் திராவிடர் என்று கூறிக் கொள்ளத்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இந்தியர் ஆட்சியில் தமிழகம்.

**அதியமான்.**

இந்தியத் துணைக் கண்டம், வெள்ளையரின் ஆட்சிக்குள் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் இருந்தது. அவர்கள் இந்தியாவின் வளங்களையெல்லாம் அள்ளிச் சென்றனர். பெரிய பெரிய அதிகாரிகளாக அவர்களே இருந்தனர். புதுவை, கோவா போன்றவை தவிர்த்து இந்தியா என்ற பெயரால் ஒரே நாடு எனப் பேசப்பட்டது. அவர்களின் ஆளுமை வாய்ப்பிற்காகப் பல தேசீய இனங்களைக் கொண்ட நாடுகள் ஒன்றிணைக்கப்பட்டு அவர்களே ஆண்டுவந்தனர். அவர்களுக்கும் துணையாக இருந்து பார்ப்பனர்களே திட்டம் வகுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பேராயக் கட்சி (காங்கிரசு) காந்தியடிகளின் தலைமையில் விடுதலை கேட்டுப் போராடிக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் சுபாசு சந்திரபோசு தனிப்படை அமைத்து, வெள்ளையர்களை போர்க் கருவிகளைக் கொண்டு தாக்கினார். வெள்ளையர்கள் இந்திய மக்களின் உரிமை உணர்ச்சியை அறிந்து அப்போதிருந்த உலக நாடுகளின் வல்லாண்மைத் தடுப்பு அறிவுரைக் கிணங்க இந்தியாவிற்கு உரிமை வழங்கினர். 1947 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா விடுதலை பெற்று உரிமை நாடாக இருந்து வருகிறது. வெள்ளையர் வெளியேறிய போது தலைமை ஆளுநராக (Governer general) ஒரு பார்ப்பனராக இராசாசியே பொறுப்பேற்றார். பின் தலைமையமைச்சராக நேரு அமர்ந்தார். இவர் வடமாநில (உத்திர புரதேசம்) பார்ப்பனர். அன்றிலிருந்து இன்று வரை அனைத்து மாநிலங்களையும் ஆட்சி செய்யும் நடுவண் அரசில் தலைமையமைச்சர் நேரு குடும்பத்தினரே—சில இடைவெளி தவிர இராசீவ் வரை அக் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களே—ஆளும் உரிமை பெற்றுள்ளனர். நேரு, அவர் மகள் இந்திரா ஒரு பார்சிக்காரரை மணந்தவர். எனவே இந்திரா பாதி வெளி நாட்டினர் பாதி இந்தியக் குடிமை. அவருடைய மகன் பார்சிக்காரருக்குப் பிறந்தவர். இந்த இராசீவ்காந்தி பிற நாட்டினரே. அவர் மனைவி இத்தாலிப் பெண் ஆனாலும் தான் ஒரு பார்ப்பான் எனவும், இந்தியன் என்றும் தம்மைக் காட்டிக் கொண்டார். எனவே நிலையை நன்கு ஆய்ந்து பார்த்தால் நம்மை இன்னும் ஆளுபவர் பார்ப்பனரே! நம் ஆட்கள் வெள்ளைக்காரனைத்தான் பிற நாட்டினர், என்றாரே தவிர, இவர்களைச் சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் இவர்களால் சிலருக்கு தம் நல வாழ்விற்கு வளங்கள் கிடைப்பதால் இவர்களை பிற நாட்டினர் என்று கூறார்] அல்லவா?

இப் பேராயக் கட்சி அனைத்திந்தியாவையும் ஒரு காலத்தில் ஆண்டு கொண்டிருந்தது. அக்கட்சியின் கொடுங்கோன்மையின் விளைவால் இன்று பல மாநிலங்களில் பேராயக்கட்சிகள் அல்லாத அரசியல் கட்சிகள் ஆண்டு கொண்டிருக்கின்றன. எனவே பேராயக் கட்சி (காங்கிரசு) என்பது இப்போது இந்திரா கட்சியாகச் சுருங்கி இந்திரா பெயரால் நேருவின் குடும்பக் கட்சியாக குறுகிக் கூனி விட்டது. இப்படிக் குறுகிய கட்சியைத்தான் தமிழ் நாட்டில் உள்ள பழைய பேராயக் கட்சிக்காரர்கள் முன் போல எண்ணி ஏமாறிக் கொண்டிருக்கிறார்கள். மூப்பனார், சிதம்பரம், அருணாசலம் இன்று இராமமூர்த்தி போன்ற முன்னாள் அடையாளந் தெரியாத இந்த ஆட்கள் அதைக் கட்டிக் காத்துக் கொண்டு தமிழினத்தின் எதிரிகளாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இக்கட்சிக்காரர்கள் நடுவண் அரசைப் பெரும்பாலும் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். காந்தியார் வளர்த்த பேராயக் கட்சிக்கும் இந்திரா பேராயக் கட்சிக்கும் எவ்வகை உறவும் கிடையாது. காந்தியைப் பற்றிக் கூறினாலும், மறந்து கூறி விடுவார்கள், ஆயின் காந்தியின் கொள்கைகள் இவர்களுக்குத் தெரியாது. இவர்களுடைய ஆட்சியில் கையூட்டுகள், பணப்பறிப்புகள், பற்பல வகைகளிலும் மக்களை—வெள்ளையனை விட—மிகுதியாகச் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு நன்றாகத் தெரிகிறது. விடுதலை கிடைப்பதற்கு மூன் தமிழ் நாட்டில் மக்கள் எந்த நிலையில் இருந்தார்களோ? அந்த நிலையிலிருந்து ஒரு முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. மக்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. வெள்ளைக்காரன் இருக்கும்போது எந்தக் குடிசை வீட்டில் இருந்து கொண்டு ஏழைகள் மூன்று வேளையும் கூழைக் குடித்துக் கொண்டிருந்தார்களோ அது போன்றே இப்போது ஒரு தடவையே கூழைக் குடித்துக் கொண்டுத் தோலாய்க் காட்சி அளிக்கிறார்கள்.

**உழவர்கள்.**

'பசுமைப் புரட்சி' என்னும் பெயரால் அரசின் உழவுத் துறையினர் ஒரு புதுப் புரட்சியை அறிமுகஞ் செய்துள்ளனர். விதைகள் முழுவதும் புதுக் கண்டு பிடிப்புகள் பழைய நெல் வகைகள் பூம்பாளை, சமபா, சிறு சம்பா, கிச்சடி, ஆணைக் கொம்பன், சீங்கண்ணி போன்ற விதைகளை இல்லாமல் ஆக்கி விட்டு, எண் பெயர்களை ஆங்கிலத்தில் கொடுத்து ஐ.ஆர்.8, ஐ.ஆர்.20, ஐ.ஆர்.50, என்றாக்கி விட்டனர். இவ்விதைகளை அரசுப் பண்டக சாலைகளிலிருந்து மிகுதியான விலைகளுக்கு விற்கிறார்கள் இவை யாவும் மற்றும் பிற தவச வகைகளும் நோய் உள்ளவை. எனவே விதைப்பதற்கு முன் பூச்சிக் கொல்லி மருந்துகளையும்

Scanned with CamScanner

சேர்த்துக் கலந்து விதைக்கச் சொல்லுகிருர்கள். நாற்றங்காலில் பிறந்த நாற்று பயன்தரும் வரை, நம நாட்டு உழவியல்துறை அதிகாரிகளுக்கே தெரியாத நோய்களில் அகப்படுவதால், அரசு அறிவிக்கும் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கிப் பயிர்களுக்கு அடித்துப் பயனை எடுக்கிருர்கள். உரமும் புதுவகையானவை. அறிவியற் கண்டுபிடிப்புகள். இவற்றை வாங்கிப் பயிர்களுக்குஇட்டுப் பயனைப் பெறுவதற்கும் உழவன் படாத பாடுபடுகிருன். ஆண்டுகளுக்கு ஆண்டு இவற்றின் விலை ஏற்றத்தை உழவர்களால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. இவ்வுரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் அணியஞ் செய்வோர் அத்தனைப் பேர்களும் வடநாட்டுப் பண முதலைகள். ஆட்சியாளர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துத் தமக்கு ஏற்றபடி ஆடும்படி ஆட்டி வைக்கும் குரங்காட்டிகள். எனவே அவர்கள் உறுதிப்படுத்தும் விலைகளை ஆளுபவர்கள் ஏன் என்று கேளார். எனவே உழவர்களைப் பல வகைகளில் கொள்ளை அடிக்கிருர்கள். அரசு இதற்கு உடந்தை. ஒன்றுஞ் செய்ய இயலாத ஏழை உழவர்கள் இவற்றை வாங்கிப் பயிர் செய்து பயன் பெறுவதற்குள், இல்லங்களில் உள்ள ஏனங்கள், பொருட்களை அடகு வைத்துப் பின் திருப்ப இயலாமல் விற்றுவிடுகிருர்கள். உழவர்களுடைய வீட்டில் வெயிலுக்குத் தங்க முடியவில்லை; மழைக்கும் இருக்க முடியவில்லை. அரும் பாடுபட்டு நெல்லை விளைவித்தவன் பட்டினி கிடந்து சாகிருன். உடுக்கத் துணிகள் கிடையாது. துண்டை உடுத்திக் கொண்டு திரிகிருன். பெண்கள் கிழிந்த இரண்டு துண்டுகளை மேல் பாதி கீழ்ப்பாதி இரு வண்ணங்களில் அணிந்து அலைகிருர்கள். இரு வண்ணச் சேலைகள் எப்படித் தெரியுமா? இரண்டு சேலைகளின் பகுதிப் பாகங்கள் கந்தலான பகுதி போக மீதியை எடுத்து இப்படி உடுத்திக் கொள்கிருர்கள். இந்தியக் குடியரசுச் சட்டம் இந்நாட்டு மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு போன்ற அடிப்படைச் சாய்க்கால்களை வழங்க வேண்டுமென்று கூறிக் கொண்டே இருக்கிறது. ஆனுல் இவ்வடிப்படை வாய்ப்புகள் யாருக்கு, இந் நாட்டை ஆளுகின்றவர்களுக்கு, மற்றவர்களுக்கல்ல. ஏனென்ருல் இவர்கள் தாம் மேடைகளில் இந்த மூன்று அடிப்படைகளும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நாற்பது ஆண்டுகளாகக் கூறிக் கொண்டுவருகின்றனர். யார் வழங்க வேண்டும், மக்கள் தாம் நாட்டை ஆளும் மன்னர்களுக்கு அழ வேண்டும் என்ற பொருள்தான் நடை முறையில் உள்ளது. இந்திய நாட்டைத் தமிழ் நாட்டோடு ஆளும் பேராயக் கட்சியினர் வேளைக்கு வேளை பகட்டான உடையணிகிருர்கள். வேளைக்கு வேளை வேறுபட்ட சுவை உணவு! வேளைக்கு வேளை தங்குவதற்கு வளமனைகள்; அதில் குண்டு நுழைய முடியாத இரும்புத்தகடுகள்; ஈ, எறும்பு கூட பறக்க முடியாதபடி காக்கும் பாதுகாவலர்கள். இராசீவ் காந்தி அணிந்திருந்த குளிர் மூக்குக் கண்ணுடியின் விலை ஆருயிரம் உருபாய் மதிப்புடையது. ஒரு நாளைக்கு இலக்கக்கணக்கான உருபா மேனி செலவு. திங்கள் தவருமல் வெளி நாடு சென்று மக்கள் வரிப்பணத்தைப் பாழடித்த போக்கு. அவர் மேனி, மினுக்கிலிருந்து மங்காமல் இருக்க வெளி நாட்டில் அணியஞ் செய்த முகப் பொடி, வழலை, (சோப்) சாரவலிவூட்டும் மாத்திரைகள். அவர் முகத்தை இந்திய நாட்டில் நெய்த துண்டுகள் துடைக்கா. சிங்கப்பூர் துண்டுகள் வேண்டுமாம். எங்குச் சென்ருலும் மனைவி சோனியா இல்லாமல் போக மாட்டார். அவ்வம்மையாரின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இன்னும் பல வாய்ப்புகளை இவ்வரசு அவருக்குச் செய்து கொண்டிருந்தது. இப்படிப் பகட்டானவர் நாட்டை ஆண்டால் மக்கள் குட்டிச்சுவருக்குள்தானே வாழ முடியும். முட்டி முட்டி உழைத்தாலும் மூன்று வேளை உணவு எப்படிக் கிடைக்கும்?

தமிழ் நாட்டு மக்கள் ஆரிய மாயைக்குள்— பார்ப்பனியச் சூழ்ச்சிக்குள்—அகப்பட்டவர்கள். இன்று நேற்றன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. கடவுள் என்ருெருவர் இருந்து மாந்தர்களை ஆட்டுவிக்கிருர், அவனின்றி அணுவும் அசையாது, அவ்னெழுதியபடி நடக்கும் போன்ற அடிப்படை மூடக் கொள்கையில் ஊறி ஊறிப் போனவர்கள். அதனுல் இராசீவ் காந்தியையும் வெங்கட்ட இராமனையும் சர்மாவையும் பார்ப்பனராகப் படைத்து வளமாக வாழும்படி அவர்கள் தலையில் உலக்கையைக் கொண்டு எழுதி விட்டான்; உழைக்குஞ் சூத்திரர்களாய்ப் படைத்து விட்டான். யாது செய்வது? அவனன்றி அணுவும் அசையாது என நினைத்து மூளையை மூடிக் கொண்டவர்கள். அணு அளவு கூட மீள வேண்டாம்; அது கரிசு (பாவம்) என்றிருப்பவர்கள். சிந்திக்க மறுப்பவர்கள். சிந்திப்பதே குற்றம் என்றிருப்பவர்கள். யாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று அசையாக்கல் தூண்களாக இருப்பவர்கள். இவர்களைச் சிந்திக்க வைப்பது எளிதன்று இமயமலையில் ஏறிவிடலாம், நிலவுக்கும் போய்விடலாம்; ஆனுல் தமிழ்நாட்டு மக்களை அறிவுடைமை உள்ளவர்களாய் மாற்றுவது என்பது சிக்கல் பிக்கலான செயல். அறிவைபபற்றிப்பேசுபவர்களை தமிழ்நாட்டு மக்கள் தண்ணீர் காட்டி விடுவார்கள், இந்தப் பிறவியில் எழுதிய தலை எழுத்தை அடுத்த பிறவியில் ஒருவேளை மாற்றி எழுதினுலும எழுதுவான்; ஏன் வீணுக அலட்டிக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பவர்கள் சிலர். ஒரு கட்சியில் வரவு இல்லை என்ருல் வேருெரு கட்சிக்கு மாறுவார்கள். ஆனுல் மூடக் கொள்கையினின்று

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# தமிழ்நாட்டின் குமுகாய அமைப்பும் பாட்டாளி மக்களின் வறுமையும்!

கீரடிப்பட்டி. க.கண்ணன்.அறி.இ.

**முன்னுரை:**

உலகம் முழுவதும் கடினமாக உடல் உழைப்பில் ஈடுபட்டுப் பொருள் உருவாக்கம் செய்வோர் வறுமையில் வாடுவதும், உழைக்காமல் உழைப்பவர்களைப் பல்வேறு வழிகளில் ஏமாற்றிச் சுரண்டுவோர்] எல்லாவகை வசதிகளையும் பெற்று வாழ்வதும் பொதுவான நடைமுறையாக உள்ளது காலந்தோறும் பாட்டாளி மக்களின் வறுமையின் தன்மைகளும் சுரண்டுவோரின் வடிவங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. உலகம் முழுவதும் இந்த வறுமைக்குக் காரணமானவர்களை எதிர்த்துத் தொடர்ந்து தாக்கப்பட்ட மக்கள் ஒவ்வொரு நிலையிலும் போராடிக் கொண்டே இருக்கின்றனர். இந் நிலையில் உலக மக்களில் ஒரு பொது மொழியையும் பொதுவான பண்பாட்டையும் உடைய தமிழ்நாட்டுப் பாட்டாளி எந்தெந்த வகையில் தாக்கப்பட்டுள்ளனர்; இவர்களுக்கு எதிரானவர்கள் யார் யார்? தங்களுடைய வறுமையின் வரலாற்றை மாற்றியமைத்து முழு உரிமையைப் பெறுவது எவ்வாறு? போன்றவற்றிற்குச் சுருக்கமாக விளக்கமளிப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

**தமிழகத்தில் சாதி (குல)ப் பிரிவுகள்:**

இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் சாதியப் பிரிவுகளின் தன்மைகளைப் புரிந்து கொண்டாலே, பாட்டாளி மக்கள் ஒன்றிணைந்து; தங்களுடைய உரிமைப் போரைத் தொடங்கி விடுவர். இதை விளங்கிக் கொள்ள விடாமலேயே உழைக்கும் மக்களை மாடாக உழைக்கவைத்த அன்றைய நிலக்கிழார்கள் (பிரபுக்கள்), மத குருமார்களிலிருந்து இன்றைய முதலாளிகள் வரை அனைவரும் மக்களை ஏமாற்றியும் திசை திருப்பியுமே வருகின்றனர்.

மாந்த இனம் தோன்றிய தொடக்கக் காலத்தில் அரத்த உறவின் அடிப்படையில் மக்கள் கூட்டங்கள் சிறு சிறு குழுக்களாகவும் கூட்டங்களாகவும் பிரிந்து வாழ்ந்தனர், இந்தக் குழுக்களுக்கிடையில் நடந்த போராட்டங்களாலும், புதிய உருவாக்க முறைகளாலும் குலங்கள் மேலும் சிதைந்தும் பிரிந்தும் பல்வேறு குழுக்களாகவும், காலப் போக்கில் அவையே சாதிகளாகவும் மாறின. முழுமையாக நாகரீகமடையாத அல்லது கல்வி மற்றும் பொருளியல் நிலைகளில் பின்தங்கியுள்ள குலங்களில் திருமண உறவுகளும் மற்ற உறவுகளும் அரத்த உறவை அடிப்படையாகக் கொண்ட உறவினர்களுக்குள்ளே நடைபெறுவதை இன்றும் தமிழகம் முழுவதும் காணலாம். அவ்வாறு வெவ்வேறு குலங்களுக்குள் உள்ள ஆணும் பெண்ணும் மறைமுகமாக உறவு கொள்ளுவதைத் தவறாகக் கருதாத மேல் சாதியினர், வெளிப்படையாகத் திருமணம் செய்வதை எதிர்க்கின்றனர். அவ்வாறு செய்வதை ஊரிலிருந்தும் குலத்திலிருந்தும் விலக்கி வைப்பது கம்ம(கிராம)ப் புறங்களில் இன்னும் நடை முறையில் உள்ளது. இவற்றில் மேல் நிலைச் சாதிகளாகச் சிலவும், இடைப்பட்ட சாதிகளாகப் பலவும் தாழ்த்தப்பட்ட சாதிகளாகப் பலவும் இருக்கின்றன.

**பொருளியல் உருவாக்கமும் சாதிய உணர்வும்:**

முன்பு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்ற பொருள்கள் ஆகியவற்றின் உருவாக்க முறை தனித் தனி கம்ம(கிராம)ங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கியது. மக்கள் தனித் தனி தொழில்களைச் செய்து வந்தனர்; அல்லது அவ்வாறு செய்யக் கட்டாயப்படுத்தப் பட்டனர். கம்மங்களில் உள்ள அதிகம் நிலம் வைத்திருப்போர்கிய மேல் சாதியினர் மட்டுமே வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டு, உழைக்கின்ற மக்களைப் பட்டியிலுள்ள ஆடு மாடுகளைப் போல் அடிமையாக வைத்திருந்தனர். ஒவ்வொரு சாதிக் கூட்டத்தையும் தனித் தனி குடியிருப்புகளில் இருக்க வைத்தனர். இந்த நிலவுடைமை உருவாக்க முறையின் உறுப்புகளாகவும் கலை மற்றும் பண்பாடுகளை வெளிப்படுத்தக் கூடிய கூறுகளாகவும் சாதிய அமைப்பு அன்றிலிருந்து இன்றுவரை தமிழகத்தில் நிலவி வருகின்றன.

இந்த நிலவுடைமையாளர்களுக்கும் இவர்களின் தலைவணங்கிய சிறிய மற்றும் பெரிய அரசர்களுக்கும் அடிமையாகத் தொண்டு செய்வதே பல்வேறு சாதிகளிலுள்ள உழைக்கும் மக்களின் வேலையாகும், பாட்டாளி மக்கள் ஒன்றாகிவிட்டால் தங்களுக்கு எதிராக வந்து விடுவார்கள் என்றே அவர்களைப் பிரித்தே வைத்தார்கள், தங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள். கீழ்த்தரமான ஆசைகளுக்காகவும், நிலங்களையும் உடைமைகளையும் கைப் பற்றவும் மற்ற நாடுகள் மீது உழைக்கின்ற மக்களை மோத விட்டுக் கொன்று குவித்ததே இந்த அரசர்களின் வரலாறாக இருக்கின்றது. அன்றைய வரலாறே இன்று வேறு வடிவங்களில் அதிக அளவில் நடை பெறுகின்றன.

பொருளியல் உருவாக்கத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் ஒன்றிணைந்து ஈடுபடும்-

போது சாதிய ஏற்றத்தாழ்வுகள் மறைந்து உணர்வால் ஒன்றுகின்றனர். ஆனால் வேலையை விட்டுக் கலந்து அவரவர் குடியிருப்புகளுக்குச் சென்றவுடன், இச் சாதிய மற்றும் அவை தொடர்பான உணர்வுகள் பாட்டாளி மக்களுக்கு வந்து விடுகின்றன. இந் நிலைமையே கம்மப் புறங்களிலும நகர்ப்புறங்களிலும் நிலவுகிறது. தாழ்த்தப்பட்ட தமிழர்கள் சிற்றூர்ப் புறங்களில் அடிப்படையான வேலைகள் அனைத்தையும் செய்கின்றனர். உழவுத் தொழில், வீடுகள் கட்டுதல், அதற்குத் தேவையான மூலப் பொருள்களைச் செய்தல் மற்றும் தனிப்பட்டவர்களின் வீடுகளில் நடக்கும் திருமணம், இறப்பு போன்ற பொது நிகழ்ச்சிகளிலும் அதிகம் உழைக்கின்றனர். இத் தொழில்களை அடுத்தவர்களுக்காக மிகக் குறைந்த கூலிக்குச் செய்து கொடுத்து விட்டு இவர்கள் மிகவும் வறுமையிலேயே வாடுகின்றனர். இந்த வறுமையை விட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு சில பொது உரிமைகளைக் கூடப் பெற முடியாத கொடுமை இன்னும் கம்மப் புறங்களில் தொடர்வதாகும்.

பண்டைய சாதியக் கொடுமைகள் இன்றைய முதலாளியத்தின் வளர்ச்சியால் ஓரளவு குறைந்தாலும்,முழுமையாக ஒழிக்கப்படாத தன்மையாலேயே பாட்டாளி மக்கள் ஒன்றிணைய முடியவில்லை. இச் 'சாதியம்' என்னும் உணர்வு மறைமுக ஒடுக்கு முறைக் கருவியாகவும் சுரண்டும் கருவியாகவும் இருந்தது.இதுவே காலப்போக்கில் மேல் சாதியினரிடம் மன நோயாகவும் வளர்ந்து விட்டது. இச் 'சாதியம்' என்னும் மன நோய்தான் பாட்டாளிப் பிரிவின ஒற்றுமைக்கு எதிராக இருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள இளைய தலைமுறைதான் தங்கள் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் எதிராக உள்ள இச் 'சாதிய' உணர்வை ஒழித்துப் பொது எதிரியை நோக்கிப் போராட முன்வர வேண்டும். தமிழ் நாட்டின் குமுகாய அமைப்பில் சாதியப் பிரிவுகள் ஆழப் புரையோடித் தமிழின உணர்வும். உழைக்கும் மக்கள் என்ற பிரிவின உணர்வும் வளரவிடாமல் செய்து கொண்டுள்ளன. பொது எதிரியை நோக்கிப் போராடும் போதுதான், நமக்குள் இருக்கின்ற சிறு சிறு வேறுபாடுகள் குறைந்து, மொழியாலும் உழைப்பாலும் நாம் தமிழகப் பாட்டாளி மக்கள் என்னும் உணர்வு மேலோங்கும்.

### *இன்று தமிழகத்தில் சாதியத்தின் அரசியல் வடிவங்கள்:*

இன்று தமிழ்நாட்டில் ஏற்றத் தாழ்வான கல்வி மற்றும் பொருளியல் வளர்ச்சியால் ஒரு சில சாதிகள் பின் தங்கி விட்டன என்று குமுறிக் கொண்டுள்ளனர். பின் தங்கிய சாதிகளில் கல்வி கற்ற ஒரு சிலர் தங்களின் கல்விக்கு ஏற்றவாறு பதவிகளையும் பொருளியல் நிலையையும் அடைய முடியவில்லையே என்று எண்ணித் தாங்கள் மட்டும் முன்னேற, படிக்காத வறுமையில் வாடுகின்ற தங்கள் சாதியினரைப் பயன்படுத்துவதே இன்று தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பல சாதிக் குழுவின் கோரிக்கையாகும்.

ஒரு சிலரைத் தவிர அனைத்து நிலைகளிலும் முன்னேறியுள்ள ஆரியப் பார்ப்பனர்களும் சங்கத்தை வைத்து மற்றவர்களின் கோரிக்கைகளைக் குலைக்கப் பார்க்கின்றனர். ஆக இன்று தோன்றியுள்ள சாதியச் சங்கங்களின் போராட்டங்களால் உண்மையான எதிரியார் என்றே தெரிய முடியாத அளவிற்குத் தமிழ்நாட்டுப் பாட்டாளி மக்கள் திசை திருப்பப்படுகின்றனர். ஒரு சிலருக்குள் ஏற்படுகின்ற சிறு சிறு பூசல்களுக்கெல்லாம் சாதி, மத வண்ணம் பூசி அதைப் பெரிதாக்குகின்ற நிலைமை இன்று தமிழ்நாட்டில் தோன்றியுள்ளது. தமிழர்களின் ஒன்றுபட்ட அரசியல் போராட்டம் சாதி, மத உணர்வால் திசை திருப்பப்படுவதை தமிழர்கள் பல்வேறு சாதி, மதச் சங்கங்களாகவும், பல்வேறு அரசியல் கட்சிகளாகவும் பிரிந்து ஒன்றையொன்று அழிக்க முற்படுவதே இதற்குச் சான்றாகும். உண்மையான மக்கள் வரலாறு இத் தமிழகப் பாட்டாளி மக்களுக்கு அரசு தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அளிக்கப் படவேயில்லை. பாட்டாளி மக்கள் கல்வி கற்பதையே தடை செய்திருந்தனர் அன்றைய ஆட்சியாளர்கள். உலக மக்களின் வரலாறே தமிழினத்தில் இருந்துதான் தொடங்குவதாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். முதல் பாடம் படிக்காமல் இரண்டாம் பாடம் படிக்க முடியாது. தமிழகப் பாட்டாளி மக்கள் எழுச்சியிலிருந்தே உலக மாந்த நேயப் பண்பாடும் ஒருமைப்பாடும் உருவாக்க முடியும்.

### *தமிழ்நாட்டின் பொருளியல் உருவாக்கத்தில் உழவர்களின் பங்கு:*

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'
'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'
'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'

'பல்வேறு தொழில்களைச் செய்து இவ்வுலகம் இயங்கினாலும் உழவுத் தொழிலுக்குப் பின்னர்தான மற்றைய தொழில்கள் எல்லாம்' — என்றும்,

'உழவுத் தொழில் செய்வோர்களே மற்றவர்களுக்கு அச்சாணி போன்றவர்கள்' — என்றும்

'உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவர்கள் — என்றும் திருவள்ளுவரால் போற்றப்பட்ட உழவுத் தொழிலும உழவர்களும் இன்று எவ்வளவு வறுமையில் வாடுகின்றனர் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காடுகளை அழித்தும் சீர்திருத்தியும் மலை சார்ந்த பகுதிகளிலும் மலை அடிவாரத்திலுள்ள சம வெளிப்பகுதிகளிலும் கடுமையான உழைப்பின் மூலம் விளை நிலமாக்கிப் புன் செய்ப் பயிர்கள் விளை

Scanned with CamScanner

வித்தனர். பின்னர் நீரைத் தேக்கிக், கால்வாய் வெட்டி நன்செய் நிலங்களாக்கி, ஏராளமாக நெல், கரும்பு, வாழை, தென்னை போன்ற பயிர்களை விளைவு செய்த உழவர்கள் இன்று வரை வறுமையிலேயே வாடுகின்றனர்.

அரசர்கள் காலத்தில் விளை பொருள்கள் வரியாக வாங்கப்பட்டு நிலக்கிழார்களும் அரசர்களும் அவரைச் சார்ந்தோரும் தின்று கொழுத்தனர். ஏராளமான கோவில்களைக் கட்டி மக்களுடைய உழைப்பு ஆற்றலை வீணடித்தனர். ஏராளமான உணவுப் பொருள்களையும் பல்வேறு வேள்விகள் என்ற பெயரில் நெருப்பில் இட்டு எரித்தனர். மக்களுடைய அறிவையும் மழுங்கடித்தனர். அரசர்கள் காலங்களிலும் பின்னர் வந்த நிலவுடைமையர் (சமீன்தார்கள்) காலங்களிலும் மக்களை மாடாக உழைக்க வைத்து, ஆடம்பரக் கோவில் விழாக்களிலும் வேடிக்கைகளிலும் தங்கள் நாள்களைக் கழித்தனர். மக்களையும் மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களுடைய வறுமையைப் பற்றிச் சிந்திக்க விடாமலேயே செய்தனர். ஒரு சிலர் போராடினாலும் அவர்கள் ஒடுக்கப்பட்டனர் அல்லது தண்டிக்கப் பட்டனர்.

வெள்ளையர்கள் தங்கள் பொருள்களுக்கு விற்பனைச் சந்தையிடங்களைக் தேடியும் புதிய தொழில்களுக்கு மூலப் பொருள்களைத் தேடியும் இந்தியாவிற்கு வந்தனர். இங்கு மக்களுக்குள் இருந்த சாதியப் பிரிவுகளும் மதப் பிரிவுகளும், அரசர்களுக்குள் இருந்த முரண்பாடுகளும் அரசர்களை அடக்கி மக்களைத் தங்களுக்கு அடிமைப் படுத்த எளிதாக இருந்தன. புதிய போர்க் கருவிகளின் துணைக் கொண்டு ஒவ்வொரு பகுதியாக ஒன்றுக்கப்பட்டு, இறுதியில் தமிழகமும் இணைக்கப் பட்டு, வெள்ளையர்களால் சுரண்டப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அடர்ந்த மரங்களால் பருவமழை தவறாது பெய்த தமிழ்நாடு வெள்ளையர்களின் வருகைக்குப்பின் மரங்கள் வெட்டப்பட்டு, தேயிலை, குளம்பி (காப்பி), ஏலக்காய் போன்றவை பயிரிடப்பட்டு வெள்ளைக்கார முதலாளிகளால் கொள்ளையடிக்கப்பட்டது. இன்று வெள்ளை முதலாளிகளோடு வடநாட்டு முதலாளிகளும் தமிழகப் பாட்டாளி மக்களைக் கொள்ளை அடிக்கின்றனர். கம்ம(கிராம)ப்புறங்களில் உழவர்களால் விளைவிக்கப்பட்ட விளை பொருள்களான நெல், வாழை, கரும்பு, தேங்காய், பருத்தி, கடலை போன்ற மூலப் பொருள்கள் சிறு சிறு வணிகர்களாலும் முதலாளிகளாலும் பெரிய நகரத்திற்குக் கொண்டு வரப்பட்டு, புதிய பொருளாக மாற்றப்பட்டுத் தமிழ் நாட்டின் பிறபகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் வெளி நாட்டுக்கும் அதிக ஊதியம் வைத்து விற்கப்படுகின்றன. விளைவு செய்தவனுக்கே இப் பொருள்கள் கிடைக்காத நிலையும் அல்லது அதிகம் விலைகொடுத்து வாங்கும் நிலையும் தற்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ளன. மொத்த வணிகத்தில் ஈடுபடுவோர் அனைவரும் வடநாட்டு முதலாளிகளும் அல்லது தமிழின உணர்வு சிறிதும் இல்லாத தரகு முதலாளிகளும் உழவர்களை ஒட்டச் சுரண்டி வருகின்றனர்.

**பசுமைப் புரட்சி ஏமாற்று(மோசடி):**

பசுமைப் புரட்சி என்னும் பெயரில் உழவர்களைக் கொள்ளையடிக்க வெளிநாட்டுமுதலாளிகள் புதிய விளைவு முறையை இந்தியத் தரகு முதலாளிகள் துணையோடு புகுத்தினர். புதிய வீரிய விதைகள், வேதியல் (இரசாயன) உரங்கள், பூச்சி பூஞ்சன மருந்துகள், அதிக நீர் என்று ஒன்றுக் கொன்று தொடர்புடைய — அதிகம் செலவாகக் கூடிய புதிய வேளாண்மை விளைவு முறையால் முதலாளிகளே மறைமுகமாக உழவர்களைச் சுரண்டினர். உலக வங்கி முதலாளிகள் கொள்ளையடிப்பதற்கும் வேதியல் (இரசாயன) நிறுவனங்கள் சுரண்டுவதற்குமே முன்பு வேளாண்மைக் கூட்டுறவு வைப்பகங்கள் தொடங்கப்பட்டன. பருவ மழை தவறிய காரணத்தாலும், அதிகம் தொடர்ந்து கடன் வாங்கி இழப்படைந்ததாலும் சிறு உழவர்கள் எல்லாம் உயிர் பிழைப்பதற்காக நகர்ப்புறத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஆக தமிழகப் பாட்டாளி மக்களில் பெரும்பான்மையாக உள்ள உழவர்கள் தொடர்ந்து வறுமையில் உழன்று கொண்டிருந்தாலும், தங்களின் வறுமைக்கான காரணத்தை முழுமையாக அறிந்து கொள்வதுமில்லை, அமைப்பாகச் சேர்ந்து செயல்படுவதுமில்லை; ஆளும் பிரிவினத்தினர் அவர்களை செயல்படவிடுவதுமில்லை.

**உழவர்களின் மூடத்தனமான 'சாத்திரங்கள்':**

தாங்கள் விளைவு செய்த பொருள்களைக் குறைந்த விலைக்குக் கொடுத்தும் குறைந்த கூலிக்கு மற்ற நிலவுடைமையாளர்க்கும் முதலாளிகளுக்கும் வேலை செய்து கொடுத்தும், தாங்கள் வாங்குகின்ற பொருள்களை அதிகம் விலை கொடுத்து வாங்கியும், இயற்கையோடு போராடியும் பல்வேறு நிலைகளில் இழப்படைகின்றனர். தமிழ்நாட்டு உழவர்கள், இவ்வாறு தங்களுடைய வறுமைக்கான காரணங்கள் வெளிப்படையாகத் தெரிந்திருந்தும் அதற்காக ஒன்றிணைந்து போராடாமல், நல்ல நேரம் எப்போது வரும், நமக்கு யாரேனும் தீங்கு செய்கின்றனரா என்று கணியர் (சோதிடர்)களிடம் வேறு தங்கள் பொருள்களை இழக்கின்றனர். ஆண்டு முழுவதும் சிறு சிறு தெய்வ வழிபாடுகள், மத விழாக்கள் போன்றவற்றிலும் தங்கள் சிந்தனையைச் செலுத்தி, நேரத்தையும் பொருளியலையும் இழக்கின்றனர். ஒவ்வொரு சாதிக்கும் பல்வேறு குல தெய்வங்கள் உண்டு. இவற்றைக் கும்பிடுவதற்கும் சாதி மத மோதல்களினால் உருவாகும் வழக்குகளைத் தீர்ப்பதற்கும் சிற்றூர்ப்புற உழவர்கள் தங்கள்

Scanned with CamScanner

நேரத்தையும் பணத்தையும் செலவிடுகின்றனர். உழவர்களுக்குப் பொது எதிரி யார் என்று சிந்திக்காமல், பக்கத்து வீட்டுக்காரனோ, அல்லது பக்கத்து நிலத்துக்காரனோ அல்லது வேறு சாதிக்காரனோ-தான் 'எதிரி என்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டும் அவர்களோடு மோதிக் கொண்டும் காலத்தைக் கழிக்கின்றனர். நம் உழைப்பையும் பொருள்களையும் சுரண்டியவர்கள் அடுக்குமாடி வீடுகளிலும், விடுதிகளிலும், குளு குளு அறைகளிலும், வயிறு முட்டப் பல்வேறு தின் பண்பண்டங்களைத் தின்று விட்டும், மதுக்குடிப்புகளைக் குடித்து விட்டும் பெண்களோடு களிப்பான (உல்லாச) வாழ்க்கை வாழ்கின்றனர்.

**தமிழ்நாட்டின் பொருளியல் உருவாக்கத்தில் தொழிலாளர்களின் பங்கு:**

தமிழகப் பாட்டாளி மக்களில் உழவர்களுக்கு அடுத்துத் தொழிலாளர்கள் பல்வேறு பிரிவுகளாக இருக்கின்றனர். நகர்ப்புறங்களில் சிறிய பெரிய தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். புதிய வேளாண்மை உருவாக்கத்திற்குரிய இயந்திரங்களையும், சிறு சிறு கருவிகளையும் மற்ற ஆடம்பரப் பொருள்களையும் இத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து செய்கின்றனர். சிற்றூர்ப்புறப் பிரிவினத்திலிருந்தும் பல சாதிகளிலிருந்தும் வந்த இவர்கள், இங்கு ஒரே பிரிவினமாக இருக்கின்றனர். உழவர்களுக்கு இல்லாத ஒற்றுமை உணர்வு இவர்களுக்கு ஓரளவு இருந்தாலும், முழுமையாகப் பாட்டாளி என்னும் பிரிவின உணர்வு இன்னும் ஏற்படவில்லை. சாதிகளாகப் பிளவுப்பட்ட தமிழர்கள் தொழிற்சாலைகளில் கட்சிகளாகப் பிளவுபட்டிருப்பதை அங்குள்ள கொடிக் கம்பங்களை வைத்தே கண்டு கொள்ளலாம். நகர்ப்புற நாகரிகத்திற்கு ஆட் பட்ட அவர்கள் தாங்கள் பயன்படுத்துகின்ற ஆடம்பரப் பொருளகள் விலை அதிகமாக இருப்பதால், சிற்றூர்ப்புற உழவர்களைப் போல் இவர்களும் வறுமையில்-தான் வாடுகின்றனர். சிற்றூர்ப்புற உழவர்களோடு இணைந்து போராடுவதற்கு இவர்கள் இன்னும் அணியமாகவில்லை.

வெளிநாட்டு மற்றும் வட இந்திய தரகுப் பெரு முதலாளிகளால் தமிழ்நாட்டு மூலப் பொருள்-களும் உழைப்பும் சுரண்டப் படுவதாலும், தொழிற் போட்டியாலும் இன்று தமிழ்நாட்டில் பல பெரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வறுமையில் வாடுகின்றனர். புதிய தொழில்களும் தொடங்கப் படவில்லை. (தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு கேட்டு கொள்கிறோம். **அமைச்சர்.**

## அந்தமானில் தாழ்த்தப்பட்ட இனமக்களின் மாபெரும் பேரணி!

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகர் போர்ட்பிளேயரில் தாழ்த்தப்பட்ட இன மக்களின் மாபெரும் பேரணி திசம்பர் 26-ஆம் பக்கல் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு இந்திய அரசியல் சட்டம் வழங்கிய சலுகைகளைத் தீவுவாழ் தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று உரிமை முழக்கமிட்டு ஆயிரக் கணக்கான மக்கள் மாபெரும் ஊர்வலம் நடத்தினர்.

பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் சித்ரா மக்கள் சிங்கராச தலைமையில் ஊர்வலம் நடை-பெற்றது. அந்தமான் ஒன்றிய (அய்க்கிய) அரிசன முன்னேற்ற சங்கம் சார்பில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. தீவுகளின் பல பகுதிகளிலிருந்தும் திரளாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

உரிமை முழக்க ஊர்வலம் முடிந்த பின் அபர்டீன் திரங்கா பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய (அய்க்கிய) தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற சங்கத் தலைவர் பர்னுட் ஆன்ருசு, செயலாளர் கன்னையா, திராவிடர் கழக மாணிக்கம், அந்தமான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மருதவாணன், பாண்டிச்சேரி மாநிலத் தாழ்த்தப்பட்ட இனமக்கள் சங்கத்தின் அமைப்பாளர் சித்ரா சிங்கராச மற்றும் சங்கச் செயல் வீரர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திக் கூட்டத்தில் உரையாற்றினர்கள். —செய்தி 'தீபரவட்டும்'

## வானொலி பரப்புதல்கள்!

உலகில் இப்பொழுது தோராயமாக 200 கோடி வானொலிப் பெட்டிகளும் 100 கோடி தொலைக் காட்சிப் பெட்டிகளும் உள்ளனவாம். உலகில் ஏறத்தாழ 100 நாடுகள் அந்நாட்டு மொழிகளில் தவிர பல அயல் நாட்டு மொழிகளிலும வானொலி, தொலைக்காட்சி ஒளிபரப்புகளை நடத்தி வருகின்றன. எடுத்துக் காட்டாக அமெரிக்கா 51 மொழிகளிலும், உருசியா 46 மொழிகளிலும், சீனா 43 மொழிகளிலும, பிரிட்டன், செருமன் 36 மொழிகளிலும், எகிப்து 30 மொழிகளிலும், இந்தியா 24 மொழிகளிலும், சப்பான் 22 மொழிகளிலும் வானொலி ஒலிபரப்புகளைச் செய்கின்றன.

---

O இந்திய மக்கள் தொகை 1992-இன் இடையில் 88 கோடியே 26 இலக்கமாக இருக்கும் எனறும், இது 2010-ஆம ஆண்டில் 117 கோடியே 20 இலக்கமாக இருக்கும் என்று கணித்துள்ளனர்.

O உலக ஒன்றியப் பேரவையில் இன்றைய நிலையில் (1992-மே இறுதியில்) 178 நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றுள்ளன.

O தமிழக வழக்கு மன்றங்களில் கடந்த மார்ச்சு 31-1992 முடிய ஏறத்தாழ 10 இலக்கம் வழக்குகள் தேங்கியுள்ளன.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பாட்டாளிப் பிரிவினத்தினர் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாமை:**

தமிழகப் பாட்டாளி மக்களில் மேலும் நெசவாளர்களாகவும், மீனவர்களாகவும் இன்னும் பல்வேறு தொழில்களைச் செய்துகொண்டுள்ள மக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் வெளி உலகத்திற்குத் தெரியாமலேயே இருக்கின்றன. வறுமை எல்லாருக்கும் பொதுவாக இருந்தாலும், அவர்கள் செய்யக்கூடிய தொழிலுக்குத் தக்கவாறு வேறுபட்டு இருக்கின்றன. உழவர்களுக்குள்ளேயே அதிகம் நிலமுள்ள ஒருவருக்கும் சிறிது நிலம் உள்ளவருக்கும் வருவாயும் இழப்பும் எண்ணப்போக்கும் மாறுபடுகின்றன அவ்வாறே நிலமில்லாத கூலி வேலை செய்யும் சிற்றூர்ப்புற உழவருக்குள்ள வாழ்க்கைச் சிக்கலும் எண்ணப்போக்கும் வேறுபடுகின்றன.

உழவர்கள் நெசவாளர்களுடைய துன்பங்களைப் பற்றியோ, மீனவர்கள் பிறருடைய துன்பங்களைப் பற்றியோ இதுவரை எண்ணிப் பார்த்ததில்லை.

அவ்வாறே மீனவர்களும் உழவர்களும் தொழிலாளர் மற்றும் நெசவாளர்களுடைய துன்பங்களைப் பற்றியும் எண்ணுவதில்லை. இவ்வாறு தமிழ்நாட்டில் பல்வேறு நிலைகளில் உழைக்கின்ற மக்கள் எல்லாம் பொதுவான பொருளியல் விளைவு என்ற தொடரியில் (சங்கிலியில்) இணைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்வதில்லை. இந்தத் தொடரித் தொடர் மேலும் இந்திய அளவில், உலக அளவில் பிணைக்கப்பட்டு உலக முதலாளிகளால் நாம் ஆட்டுவிக்கப்படுகின்றோம் என்பதைப் பாட்டாளி மக்கள் இன்னும் உணரவில்லை. நம் வறுமைக்கு எதிராகவும், உரிமைக்காகவும் அணி திரளும்போதுதான் நம் அனைவருக்கும் பொதுவான எதிரி யார் என்றும் நண்பன் யார் என்றும் தெரியவரும்.

**பொது எதிரியை அடையாளம் காணுதல்:**

தமிழ்நாட்டில் உள்ள உழைக்கும் மக்கள் பல்வேறு சாதிகளாகவும், மதங்களாகவும், கட்சிகளாகவும், பிரிக்கப்பட்டுத் தொடர்ந்து வறுமையிலும் அறியாமையிலும் ஆளும் தொழிற்பிரிவுகளால் வைக்கப்பட்டுள்ளனர். தங்களுக்குப் பொது எதிரி யார் என்றே அவர்களுக்குத் தெரிவதில்லை அந்தந்தப் பிரிவினங்களில் ஒரு சிலர் மட்டுமே இவ்வுண்மையை அறிந்து கொண்டுள்ளனர். இவர்களின் மூலமே மற்ற மக்களை ஒன்றிணைக்கவேண்டும். உழவர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள் மற்றுமுள்ள உழைக்கும்மக்களை முதலில் தொழில் அடிப்படையிலேனும் ஒன்றிணைக்க வேண்டும். பின்னர் மற்ற பிரிவினத்தினரோடு சேர்ந்து பொது எதிரியை எதிர்த்துப் போராட வேண்டும்.

இன்று தமிழகத்தில் தோன்றியுள்ள சாதிச் சங்கங்களின் போராட்டங்கள், தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர்கள் இட ஒதுக்கீடு போன்ற போராட்டங்கள் நீண்ட பயனுடைய, முழுமையான உரிமைகளைப் பெற்றுத் தரா. மேலும் பொது எதிரி மறைந்து கொள்வதற்கும் நன்கு சுரண்டுவதற்குமே பயன்படும். ஆட்டையும் ஆட்டையும் மோதவிட்டு நரி அரத்தம் குடித்த கதைதான் இங்கு நடைபெறுகிறது.

**முடிவுரை:** முதலாளியத்தின் உச்சகட்ட வளர்ச்சியாலும் அறிவியல் முன்னேற்றத்தாலும் உலக மக்கள் அனைவரும் ஒரே வட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர் அல்லது ஒரே தொடரியில் பிணைக்கப்பட்டுள்ளனர் உலக மக்கள் பல மொழிகள், மதக் கொள்கைகள் அரசியல் நோக்-பாடுகளையுடைய நாடுகளாய் இருந்தாலும், இன்றைய நிலையில் சோவியத்து உருசியாவின் பக்கம் ஒரு பகுதி நாடுகளும், அமெரிக்காவின் பக்கம் மற்ற பகுதி நாடுகளும் அணி சேர்ந்துள்ளன. இந்த இரண்டு மேல் நிலை வல்லரசு நாடுகளுக்குள் ஏற்படுகின்ற தாக்கமே, அல்லது பொருளியலைச் சுரண்டுகின்ற போட்டியும் உள் முரண்பாடுகளுமே உலகம் முழுவதும் போர்களாக வடிவெடுத்திருக்கின்றன. இந்த இரு வல்லரசு நாடுகளின் தலைமையில்தான் மற்ற சிறு வல்லரசு நாடுகளும், வளர்ச்சியற்ற நாடுகளின் மக்கள் உழைப்பையும் மூலப் பொருள்களையும் சுரண்டுகின்றன. இந்தியா போன்ற பல மொழிகளையும் பல்வேறு பழக்க வழக்கங்களையும் உடைய பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் இன்றைய உலக முதலாளியத்தின் அரசியல் சூழ்ச்சிகளையும் பொருளியல் சுரண்டல் முறைகளையும் அறிந்து கொள்ளமுடியாது. எனவேதான் ஒரு பொது மொழியிலும் பண்பாட்டாலும் ஒன்றிணைக்கப்பட்ட மக்களைத் தேசிய இன உணர்வால் விழிப்புணர்வூட்டி அவர்களை எழுச்சி கொள்ளச் செய்யவேண்டும்; தங்கள் உரிமைக்காகப் போராட வைக்க வேண்டும். அப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியிலேயே அவர்களை உலகம் தழுவிய பார்வைக்கு உயர்த்தமுடியும். இந்நோக்கத்திலேயே தமிழகப் பாட்டாளி மக்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி வழியே தமிழின உணர்வையும், பல்வேறு நிலைகளில் உழைக்கின்ற தன்மையால் பாட்டாளிப் பிரிவின உணர்வையும் பெறவேண்டும். இதுவே நடைமுறைக்கு ஏற்ற உண்மையுமாகும். மொழித்தேசிய இன அடிப்படையிலேயே ஏற்கனவே பல்வேறு நாடுகள் அமைந்திருப்பதும், அடிமையுண்ட மக்கள் மொழித் தேசிய இன அடிப்படையில் பல நாடுகளில் புதிய போராட்டங்களைத் தொடங்கவிருப்பதும் இதற்குச் சான்றாகும். இவ் வழியல்லாமல், வேறு வழியில் சாதி வழிப் போராட்டங்களோ அல்லது மத வழி-

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# தமிழறிஞர்கள், முழக்க ஆர்ப்பாட்டமும் ஆங்கில அரசாணை எரிப்பும் செய்வர்!

தமிழ்நாட்டில் இன்று தமிழ், ஆட்சி மொழியாக இல்லை. பயிற்று மொழியாகவும் இல்லை. அற (நீதி) மன்றத்தில் தமிழில்லை. மழலைப் பள்ளிகளில் தமிழில்லை. இசை அரங்குகளில் தமிழில்லை. கடைப் பலகைகளில் தமிழில்லை;

தமிழ் ஆட்சிமொழி, கல்வி மொழி என்னும் இரண்டு உயிர்க் கொள்கைகளும் தமிழக ஆட்சியாளர்களால் முடமாக்கப் பெற்றுள்ளன; தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தில் அளிக்கப் பெற்றுள்ள நெறி(விதி)விலக்குகள் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைச் சீர்குலைத்துள்ளன;

தமிழ் மொழி வளர்ச்சியில் கவனத்தையும் ஈடுபாட்டையும் காட்டவேண்டிய ஆட்சியாளர்கள், ஆங்கில மொழிக்குப் பரிந்து பேசிக் குற்றேவல் செய்வோராக மாறினமையால், தமிழர் தம் வாழ்வு நிலையில் ஆங்கிலமே குடிகொண்டுள்ளது;

கல்வி நிலைகளில் தமிழ்வழிக் கல்விக் கொள்கையினை அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம், வேளாண்மை, சட்டம் ஆகிய அனைத்து மட்டங்களிலும் செயற்படுத்த அரசு உள் முழுமையான நடவடிக்கையினை எடுக்கவில்லை; மழலைப் பள்ளிகளைச் சீரமைக்க ஏற்படுத்தப் பெற்ற குழுவின் அறிக்கையினை நடைமுறைப்படுத்த அரசு முன்வரவில்லை;

தமிழ்நாட்டில் பணியாற்றும் அரசு அதிகாரிகள், தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்த கண்டிப்பான நடவடிக்கை எதனையும் அரசு எடுக்கவில்லை;

தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட தமிழ் வளர்ச்சி அமைப்புகள் பேரளவில் சடங்குக்காகத் தமிழ் வளர்ச்சியைச் செய்கின்றன;

தமிழ்நாட்டுத் தொலைக்காட்சி, வானொலி அமைப்புகள் இந்தி நிகழ்ச்சிகளைத் தமிழ் மக்கள் மீது நேரடியாகத் திணிக்கின்றன. தொலைக்காட்சி வாயிலாக இந்திப் படையெடுப்பே நடந்து வருகின்றது. இதற்கானக் கண்டனத்தைத் தெரிவிக்கவோ, தரமான தமிழ் நிகழ்ச்சிகளின் நேரத்தை அதிகப்படுத்தவோ குரல் கொடுக்கத் தமிழக அரசு தவறிவிட்டது.

வட இந்திய மாநிலங்கள் அனைத்தும் கல்வி நிலையிலும் தாய்மொழிக் கொள்கையினை நிலைநிறுத்தி விட்டன. அண்மையில் கருநாடக அரசு கன்னட எழுச்சி ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் அரசு அலுவலகங்களில் ஆங்கில மொழிப் பயன்படுத்த தடையிட்டுள்ளது. மாதிரிக் கன்னடப் பள்ளிகளைத் தொடங்குதல், கன்னடம் பயின்றோருக்கு அரசுப் பணியிடங்களில் ஒதுக்கீடு செய்தல் எனக் கன்னட மொழி வளர்ச்சியினைக் கருநாடக அரசு ஊக்குவித்துள்ளது.

இந்த நிலைகளை எல்லாம் தமிழக அரசுக்கு உணர்த்தும் வண்ணம் சென்னையிலுள்ள தலைநகர்த் தமிழ்ச் சங்கம் பல்லாண்டாக உண்ணா நோன்பு, பேரணி, முழக்க ஆர்ப்பாட்டம், கோட்டை முன் மறியல் போராட்டம், ஆங்கில அரசாணை எரிப்புப் போராட்டம் எனப் பல அறவழிப் போரட்டத்தின் வாயிலாக எடுத்துரைத்தும் தமிழக அரசினர் கேளாக் காதினராய் உள்ளனர்.

தமிழ் வளர்ச்சி அமைப்புகளை வலுப்படுத்தவும், தமிழ் வளர்ச்சிக்காகச் செலவு செய்யவும் பொருள் வாய்ப்பு இல்லை எனக் கைவிரித்துத் தமிழ் வளர்ச்சியை வறுமைக் கோட்டுக்குக் கீழ் ஆக்கிவருகின்ற தமிழக அரசு, தமிழின் பேரால் 'உலகத் தமிழ் மாநாடு' என்னும் பேரவையில் பல கோடி உருவாக்களைப் பாழடித்துக் கட்சியை விளம்பரப் படுத்தவும், தனி மாந்தர்களைப் போற்றி பாடவும் மேற்கொள்ளுகின்ற முயற்சியாகவே உலகத் தமிழ் மாநாட்டைத் தலைநகரத் தமிழ்ச் சங்கம் கருதுகிறது.

தமிழின் மீது உண்மையான பற்று ஆட்சியாளர்களுக்கு இருக்குமாயின், தமிழ் ஆட்சிமொழி, கல்வி மொழி ஆகிய இரு கொள்கைகளிலும் விரிவான செற்பாடுகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முற்பட்டு விட்டு, உலகத் தமிழ் மாநாட்டை நடத்தட்டும். நாமும் போற்றி வரவேற்போம்;

இந்த விளக்கங்கட்குப் பிறகும், தமிழ் ஆட்சிமொழி, பயிற்று மொழிக் கொள்கைகளை முழுமையாக நடைமுறைப் படுத்தத் தமிழக அரசு தவறுமானால், உலகத் தமிழ் மாநாட்டு வாயில் முன்பாக முழக்க ஆர்ப்பாட்டத்தையும், ஆங்கில அரசாணை எரிப்புப் போராட்டத்தையும் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் நடத்தும். இப் போராட்டத்துக்குத் தமிழ் அறிஞர்கள், தமிழ் அமைப்புகள் துணை நிற்கவும் போராட்டத்தில் கலந்து கொள்ளவும் வேண்டுகிறோம். போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் ஒப்புதல் கடிதத்தை சங்க முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

தலைநகர்த் தமிழ்ச் சங்கம்
ஆறும் தெரு, கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-114.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)
யிலான போராட்டங்களோ அல்லது இனத்தைக் காட்டிக் கொடுத்து மக்கள் என்றென்றும் அறியாமையிலும் வறுமையிலும், அடிமையிலும் வைத்து நாளுக்கு ஒவ்வொன்றாகத் தோன்றிக் கொண்டுள்ள தரகு முதலாளிய கட்சிகளோ, திரைப்படக் கூத்தர்கள் கட்சிகளோ தமிழகப் பாட்டாளி மக்களுக்கு என்றும் பயன் அளிக்கப் போவதில்லை. தமிழக மக்களே! சிந்திப்போம்! ஒன்றிணைவோம்! செயல்படுவோம்! நம் உரிமையை மீட்போம்!!! O

# காவல்துறையின் கரவான தடுப்பு நடவடிக்கைகள்! பெருஞ்சித்திரனார் அறிக்கை!

'விழுப்புரத்திலும் ஆத்தூரிலும் காந்தி சிலைக்குக் குண்டு வைக்கத் தூண்டினேன்' என்று தவறாக என்மேல் பொய்க்குற்றம் சாற்றி, என்னை ஏழு மாதங்கள் 'தடா'வில் சிறை வைத்தனர். இதற்குச் செயலலிதா அரசு தூண்டுகோலாகவும், காவல் துறையினர் துணையாகவும் இருந்தனர்.

பல்வேறு வகையான போராட்டங்கள், கூட்டங்கள், மாநாடுகள், பேரணிகள், ஊர்வலங்கள் நடத்தப் பெற்ற பின்னும், உச்சநெறிமன்ற முன்னாள் நடுவர் வி. ஆர். கிருஷ்ணய்யர், பம்பாய் உயர்நெறிமன்ற முன்னாள் நடுவர் வி.எம். தார்குண்டே, செய்தித் திறனாய்வாளர் குல்தீப் நையார், அஷீஷ் நந்தி, மருத்துவர் பாலகோபால், கே.ஜீ.கண்ணபிரான், வர வர ராவ், பி.யூ.சி.எல். தமிழ்நாடு பிரிவுப் பொதுச் செயலாளர் கா.மனோகரன் உள்பட நூற்றுக்கு மேற்பட்ட பேராசிரியர்கள், செய்தியிதழாளர்கள், மாந்த உரிமைகள் பாதுகாப்பு அமைப்பினர், ஆய்வாளர்கள், கலைஞர்கள், முகாமைப் பெருமக்கள் முதலியவர்கள் முதலமைச்சர் செயலலிதாவிற்கு என்னை விடுதலை செய்யக் கோரி மடல்கள் விடுத்த பின்னருந்தான் நான் பொறுப்பில் விடுதலை செய்யப் பெற்றேன்.

1. இனி, விடுதலை ஆகி வெளிவந்த பின்னரும், காவல்துறை அதிகாரிகள் 'தென்மொழி' அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து என்னைப் பார்ப்பதும், பல கோணங்களில் வினாக்கள் எழுப்புவதும் இன்னும் தொடர்ந்து நடந்து வருகின்றன. அடுத்து,

2. 'தென்மொழி' அலுவலகம் உள்ள கட்டட உரிமையாளரும், மயிலார்ப்பூரில் நாங்கள் குடியிருந்த வீட்டு உரிமையாளரும், அலுவலகத்தையும் வீட்டையும் விட்டு வெளியேற்றச் சொல்லிக் காவல்துறையினரால் கட்டாயப்படுத்தப்பட்டு வந்தனர். எனவே அவர்களும் அவர்களுக்கு அஞ்சிக் கொண்டு என்னையும் என் குடும்பத்தாரையும் வெளியேறும்படி வலியுறுத்தி வருகின்றனர்.

3. கடந்த நவம்பர் '93-இறுதியில், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு மகளிர் மேனிலைப் பள்ளியில் என்னை அழைத்து இலக்கிய மன்றக் கூட்டத்தில் பேச ஏற்பாடாகியிருந்தது. இதனை எப்படியோ தெரிந்து கொண்ட காவல்துறையினர், அதனை அரசுக்குந் தெரிவித்து, அக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த அம் பள்ளியின் தலைமையாசிரியை அவர் ஏறத்தாழ பத்தாண்டுகள் அப்பள்ளியின் பொறுப்பாளராக இருந்த நிலையையும் பாராமல், கல்வித்துறையிலிருந்தே விடுவிக்கப் பெற்று, அரசு அலுவலகத்துறைக்கு, அந் நிகழ்ச்சி நடைபெறவிருந்த நாளுக்கு முந்தின நாளே மாற்றப்பெற்றுள்ளார். இனி,

4. திசம்பர் '93க்கு இடையில், தொழுதூரில் கல்லூரிப் பேராசிரியர்கள், மேனிலைப் பள்ளிப் பட்டப் படிப்பு ஆசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் பலர் சேர்ந்து என்னை அழைத்து ஓர் இலக்கிய மன்றத்தைத் தொடக்கவிருந்ததை அறிந்த காவல்துறையினர், அவ்வாசிரியர்களைச் சந்தித்து, அவர்கள் என்னையழைத்து நிகழ்ச்சி நடத்தினால் வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றப் படவும் உசாவலுக்கு ஆளாகவும், பணியிழக்கவும் வேண்டியிருக்கும் என்று மிரட்டப்பட்டுள்ளார்கள். அதனால் ஏற்பாடாகியிருந்த அந் நிகழ்ச்சி வேறு சிலரைக் கொண்டு நடைபெற வேண்டுவதாயிற்று. அடுத்து,

5. இவ்வாண்டுப் பொங்கல் விழாவின், திருவள்ளுவர் நாள் நிகழ்ச்சியொன்று சென்னையை அடுத்த பொன்னேரியில் உள்ள அரசினர் கலைக்கல்லூரி ஒன்றில் என்னைக் கொண்டு நிகழ்த்த ஏற்பாடாகியிருந்தது. அதைக் கேள்வியுற்ற காவலர்கள், அக் கல்லூரி முதல்வரிடம் தொடர்பு கொண்டு, 'அந்நிகழ்ச்சிக்குப் பெருஞ்சித்திரனார் வருவதானால், உங்களுக்கும், இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யக் காரணமான பேராசிரியர் சிலர்க்கும் மாறுதல் உறுதி' என்று அச்சுறுத்தியுள்ளனர். அதன் பின்னர் என்னை அழைப்பது தவிர்க்கப் பெற்றது.

—இவ்வாறு பலவகையிலும், நான் 'தடா'-விலிருந்து வெளிவந்த பின்னரும், காவல்துறையினரின் கண்காணிப்பும், கடுபிடியும் மறைமுக அச்சுறுத்தல்களும் மிகுந்து கொண்டே வருவதை அன்பர்களுக்கும் அரசுக்கும், அறிஞர்களுக்கும் அறிவிக்க வேண்டுவது என் கடமையாயிற்று.

அறநெறி பிழைக்க வேண்டுவதானால், இத்தகைய நடவடிக்கைகளும், வஞ்சகச் செயல்களும் தவிர்க்கப் பெறுவது நல்லது. ○

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறவே மாட்டார்கள். கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் என்று இவர்களைத்தான் சொல்லவேண்டும். அறிவியலும், நாகரிகமும் வளர்ந்துவரும் இவ்வுலகில் இந்நாட்டு மக்களைப் போல சிந்தனை அற்றவர்களை வேறெங்கும்காண இயலாது.

மாந்தர்களுடைய துன்பத்திற்கு, பொருளியல் குறைப் பாட்டிற்கு என்ன காரணியம் எனச் சிறிதும் எண்ணிப் பார்க்க மாட்டார்கள். ஆனால் சாதிச் சண்டை சமயக் குட்டைகளை வளர்த்தெடுத்து, அதற்காகப் பிரிந்து வாழும் குணம் படைத்தவர்கள்

(தொடரும்)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை. அது வரலாற்று உண்மையும் இல்லை; சரியானதும் இல்லை. தமிழரையே அவர்கள், இவ்வுணர்வு பெற்று ஒன்றுபட்டு விடக்கூடாது என்பதற்காகவே, திராவிடர்கள என்று கூறத் தொடங்கினர் என்னும் வரலாற்று உண்மையை எந்த வகையிலும் நாம் மறந்துவிடக் கூடாது. இவ்வாறு இன்று வரை அவர்களின் சூழ்ச்சியால் கூறிய கூற்றுகளையே ஏற்று நாம் திராவிடர்கள் என்று நம்மைக் கூறிவந்ததால்தான், நாம் தமிழர் என்னும் இனவுணர்வு பெறமுடியாமல் போனோம். அதனால் ஒற்றுமையில்லாமலும் ஆனோம். இதில் இன்னொரு வேடிக்கையும் அறியாமையும் என்னவென்றால், நாம் நம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ளாமல் திராவிடர் என்று கூற முற்பட்டதுடன், நம்மை, முதலியார், பிள்ளையார், கவண்டர், படையாட்சி, வன்னியர், பள்ளர், பறையர், முக்குலத்தோர் என்று தொழிலடிப்படைச் சாதிகளின் பெயரால் பிரிந்த தொழிற் சாதிப் பிரிவுகளைக் கூறியும் ஒன்றுபட முடியாமல் வேறுபட்டுக் கிடக்கின்றோம் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும். எனவேதான் நம்மை ஆரியப் பார்ப்பனர் கருத்துப்படி சூத்திரர், சற் சூத்திரர் (நல்ல சூத்திரர் அஃதாவது ஆரியப் பார்ப்பனர்களுக்கு அடங்கி நின்ற சூத்திரர்), பஞ்சமர் (ஐந்தாம் பிரிவினர்) என்றெல்லாம் கூறிக் கொள்வது எவ்வளவு தவறோ, கேடோ, தன்மான, தன்மதிப்பு (சுயமரியாதை) இழப்போ, அவ்வளவு தவறும், கேடும், தன்மான, தன்மதிப்பு இழப்பும் நம்மைத் திராவிடர் என்று கூறிக் கொள்வதிலும் சேரும் என்பதை நாம் முதலில் இந்த கால கட்டத்திலேனும் எண்ணி ஒப்புக் கொள்ளுதல் வேண்டும் என்க!

எனவே, இனிமேலாகிலும் நம்மைத் திராவிடர், (அருள் கனிந்து, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தமிழ் உள்ளங்களும் கவனிக்கவும்) என்றோ, திராவிடத் தமிழர் (திராவிடர் தமிழர் கழக அமைப்பாளர் திரு. நகைமுகனார் அன்புடன் கவனிக்கவும்) என்றோ கூறிக் கொள்ளாமல் தமிழர், தமிழினத்தவர் என்றே கூறிக் கொண்டு, நம் தமிழின முன்னேற்றத்திற்கு ஒரு வலிவையும் பொலிவையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுப்போமாக. O

---

## ஆசிரியர் வீடு மாற்றம்.

பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் இல்லம் மயிலார்ப்பூர், 12, துவாரகைக் குடியிருப்பிலிருந்து, சென்னை-17, தியாகராய நகர், தென் மேற்குப் போக் சாலை, எண் 27க்கு மாற்றப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் இனி ஆசிரியர் இல்லத்திற்கு வருவதாயின் புதிய முகவரிக்கு வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர்

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு-83**

**தன் இன வரலாற்றையும், உரிமையையும், அவற்றை மீட்கும் கடமையையும் உணராதவன் தனக்கு ஒரு வரலாற்றையும் உருவாக்க முடியாது; உரிமையையும் பெற முடியாது; தன் கடமையையும் செய்ய வியலாது.**

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 168.

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1-50 |
| ஆண்டுக் கட்டணம் | உரு: 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு: 18-00 |

பெறுநர்:
திரு / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.